# சூரிய ஆற்றலுடன் சேமியுங்கள். இது அத்தனை எளிமையானது.

Solar Homes திட்டத்தின் மூலம் 250,000-க்கும் மேற்பட்ட விக்டோரிய மக்கள் சோலார் பேனல்கள், மின்கலங்கள் மற்றும் வெந்நீர் அமைப்புகளை நிறுவுவதற்கு உதவியுள்ளோம்.

Solar Victoria | VICTORIA State Government



## சோலார் விக்டோரியா குறித்து

சோலார் விக்டோரியாவின் Solar Homes திட்டம் மின் கட்டணங்களைச் சேமிக்க விக்டோரியவாசிகளுக்கு உதவுவதற்காக சோலார் பேனல்களை, மின்கலங்களை மற்றும் ஆற்றல் திறனுள்ள வெந்நீர் அமைப்புகளை நிறுவுவதற்கு தள்ளுபடிகளையும் வட்டியில்லாக் கடன்களையும் வழங்குகிறது.

தகுதியுள்ள வீட்டு உரிமையாளர்கள் அனைத்து மூன்று ஊக்கத்தொகைகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

**சோலார் பேனல் (PV) தள்ளுபடி**
தகுதியுள்ள வீடுகள் சோலார் பேனல்களை (PV) நிறுவும் செலவில் $1,400 வரை தள்ளுபடி பெறலாம். இந்த சோலார் பேனல் (PV) தள்ளுபடி கட்டுமானப் பணியில் இருக்கும் வீடுகளுக்கும் கிடைக்கிறது.

வட்டியில்லாக் கடன்களும் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**வாடகைச் சொத்துக்களுக்கான சோலாரில் தள்ளுபடி**
தகுதிவாய்ந்த வாடகைக்கு விடுபவர், ஒரு நிதியாண்டுக்கு இரு வாடகைச் சொத்துக்கள் வரையிலும் சோலார் பேனல்களை (PV) நிறுவுவதில் $1,400 வரையிலும் தள்ளுபடி பெறலாம்.

வட்டியில்லாக் கடன்களும் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**வெந்நீர் தள்ளுபடி**
தகுதிவாந்த வீடுகள் சோலார் வெந்நீர் அல்லது சூடுபடுத்தும் பம்ப் வெந்நீர் அமைப்புக்கான செலவில் $1,000 வரையிலும் தள்ளுபடி பெறலாம்.

**சோலார் மின்கலத்தில் தள்ளுபடி**
தகுதியுள்ள வீடுகள் சோலார் மின்கலம் நிறுவும் செலவில் $8,800 வரை வட்டியில்லாக் கடன் பெறலாம்.

## நான் எவ்வாறு விண்ணப்பிப்பது?

**படி 1: உங்கள் தகுதிநிலையை உறுதிசெய்யுங்கள்**
அடுத்த பக்கத்தில் தகுதி வரம்புப் பட்டியலை நீங்கள் வாசிக்கலாம்.

**படி 2: விலைக்குறிப்பைப் பெறுங்கள்**
ஓர் அங்கீகரிக்கப்பட்ட சோலார் விக்டோரியா விற்பனையாளரைத் தொடர்புகொண்டு விலைக்குறிப்பு பெறுங்கள். அவர்களது விபரங்களை சோலார் விக்டோரியா இணையதளமான solar.vic.gov.au/retailers -ல் காணலாம்

ஒரு சோலார் விற்பனையாளரை நீங்கள் தொடர்புகொள்ளும்போது, நீங்கள் சோலார் விக்டோரியா தள்ளுபடி அல்லது கடன்பெற விண்ணப்பிக்க ஆர்வம் கொண்டிருப்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

தள்ளுபடி அல்லது கடனுக்குத் தகுதிபெற, சோலார் விக்டோரியாவின் solar.vic.gov.au/product-lists பக்கத்தில் தயாரிப்புகள் பட்டியலில் உள்ள தயாரிப்புகள் இருக்க வேண்டும்.

**படி 3: உங்கள் தள்ளுபடிக்கு விண்ணப்பித்தல்**
ஓர் அங்கீகரிக்கப்பட்ட சோலார் விற்பனையாளரிடமிருந்து விலைக்குறிப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டதும், நீங்கள் சோலார் விக்டோரியா வாடிக்கையாளர் இணையவாயில் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

உங்கள் சார்பாக உங்கள் சோலார் விற்பனையாளர் தள்ளுபடி அல்லது கடன் தொகையைப் பெற்றுக்கொள்வார். உங்கள் ஒட்டுமொத்த அமைப்பு மற்றும் நிறுவல் செலவிலிருந்து தொகை கழிக்கப்படும். நிறுவப்பட்டதும் மீதி நிலுவைத் தொகையை நேரடியாக உங்கள் சோலார் விற்பனையாளரிடம் செலுத்துவது உங்கள் பொறுப்பு.

மேலும் அறிந்துகொள்ள, solar.vic.gov.au/apply பக்கத்திற்கு வருகை தாருங்கள்.

## தொடர்புக்கு

இந்தத் திட்டம் குறித்த கூடுதல் விபரங்களை solar.vic.gov.au என்ற இணையதளத்திலோ அல்லது எங்கள் வாடிக்கையாளர் சேவைக்குழுவை 1300 376 393 (வர்த்தக நேரத்தின்போது) அழைத்து அறிந்துகொள்ளலாம்.

உங்கள் மொழியில் நீங்கள் எங்களுடன் பேச விரும்பினால் தேசிய மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை 131 450 என்ற எண்ணில் அழைத்து இலவச தொலைபேசி மொழிபெயர்ப்புச் சேவையை நீங்கள் அணுகலாம்.

உங்கள் மொழியில் இந்த விபரமடலை வாசிக்க solar.vic.gov.au/community-languages பக்கத்திற்கு வருகை தாருங்கள்

**அணுகல் உரிமை**

இந்த வெளியீட்டை மாற்று வடிவத்தில் பெறுவதற்கு சோலார் விக்டோரியாவை **comms@team.solar.vic.gov.au** என்ற மின்னஞ்சல் வாயிலாகத் தொடர்புகொள்ளுங்கள்

இணையத்தில் பின்வரும் தளத்திலும் இந்த ஆவணம் கிடைக்கப்பெறுகிறது: **solar.vic.gov.au**

1. வழக்கமான 6.16 Kw கூரை அமைப்பை அடிப்படையாகக் கொண்டது

## பலன்கள்

- உங்கள் மின் கட்டணங்களைக் குறையுங்கள்
- பருவநிலை மாற்றத்தைத் தடுத்து நிறுத்துங்கள்
- உங்கள் சொந்த மின்சாரத்தைக் கொண்டிருங்கள்

# தள்ளுபடி மற்றும் கடனுக்கான தகுதி வரம்புகள்

## சோலார் பேனல் (PV) தள்ளுபடி – $1,400 வரை

**பின்வரும் தகுதிகள் இருந்தால் நீங்கள் சோலார் பேனல் (PV) தள்ளுபடி பெறலாம்:**

- அமைப்பு நிறுவப்படும் இடத்தில் தற்போது இருக்கும் சொத்தின் உடைமையாளரும்-ஆக்கிரமிப்பாளரும் நீங்கள் எனில் அல்லது கட்டுமானத்தில் இருக்கும் வீட்டின் உரிமையாளர் எனில்
- அனைத்து உரிமையாளர்களின் ஒருங்கிணைந்த குடும்ப மொத்த வரி வருவாய் ஆண்டுக்கு $210,000-க்குக் குறைவாக இருந்தால்[1]
- நீங்கள் ஏற்கெனவே ஒரு உடைமையாளர்-ஆக்கிரமிப்பாளராக சோலார் ஹோம்ஸ் திட்டத்தில் சோலார் பேனல் (PV) அல்லது சோலார் மின்கலத் தள்ளுபடியைப் பெற்றிருக்கவில்லை எனில்
- இருக்கிற சொத்தின் மதிப்பு $3 மில்லியனுக்குக் கீழ் இருந்தால் அல்லது கட்டுமானத்தில் இருக்கும் வீடு முடிக்கப்படும்போது $3 மில்லியனுக்குக் கீழ் மதிப்பிடப்படுமென்றால்
- சொத்து முகவரி சோலார் ஹோம்ஸ் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே சோலார் பேனல் (PV) தள்ளுபடியை அல்லது சோலார் மின்கலத் தள்ளுபடியைப் பெற்றிருக்கவில்லை எனில்[2]
- சொத்தில் இதற்கு முன்பு ஏற்கெனவே சோலார் PV அமைப்பு நிறுவப்பட்டு இருக்கவில்லை எனில் (2009 நவம்பர் 1ம் தேதிக்கு முன்பாக இல்லாதவரை).

## வாடகைச் சொத்துக்களுக்கான சோலார் பேனல் (PV) தள்ளுபடி - $1,400 வரையிலும்

**நீங்கள் விக்டோரியாவில் வாடகைக்கு விடுபவர் எனில், பின்வரும் தகுதி அடிப்படையில் நீங்கள் தள்ளுபடி பெற முடியும்:**

- வாடகை செலுத்துவோரின் ஒட்டுமொத்த குடும்ப வருவாய் ஆண்டுக்கு $210,000-க்குக் குறைவாக இருந்தால்[1]
- சொத்து மதிப்பு $3 மில்லியனுக்குக் குறைவாக இருந்து ஏற்கெனவே சோலார் பேனல் (PV) நிறுவப்பட்டிருக்கவில்லை எனில்
- சொத்து முகவரி சோலார் ஹோம்ஸ் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே சோலார் பேனல் (PV) தள்ளுபடியை அல்லது சோலார் மின்கலத் தள்ளுபடியைப் பெற்றிருக்கவில்லை எனில்[2]
- சொத்து இருக்குமிடத்தில் 2009 நவம்பர் 1ஆம் தேதிக்குப்பின் சோலார் பேனல் (PV) அமைப்பு நிறுவப்பட்டிருக்கக்கூடாது.
- *வாடகைக்கு விடுபவருக்கும் வாடகைதாரருக்கும் இடையே ஒரு சோலார் ஹோம்ஸ் திட்ட ஒப்பந்தமானது* வாடகைக்கு விடுபவராலும் அனைத்து வாடகை செலுத்துவோராலும் கையொப்பமிடப்படுகிறது
- ஒரு வாடகை ஒப்பந்தம் நடைமுறையில் இருக்க சொத்து தற்போது வாடகைக்கு விடப்பட்டிருக்க வேண்டும்.

## வெந்நீர் தள்ளுபடி - $1,000 வரையிலும்

**ஓர் அங்கீகரிக்கப்பட்ட சோலார் வெந்நீர் அல்லது வெந்நீர் பம்ப் வெந்நீர் அமைப்புக்கு பின்வரும் தகுதி அடிப்படையில் நீங்கள் தள்ளுபடி பெறலாம்:**

- அமைப்பு நிறுவப்படும் சொத்தின் உடைமையாளரும்-ஆக்கிரமிப்பாளரும் நீங்கள் எனில்
- அனைத்து உரிமையாளர்களின் ஒருங்கிணைந்த குடும்ப மொத்த வரி வருவாய் ஆண்டுக்கு $210,000-க்குக் குறைவாக இருந்தால்[1]
- நீங்கள் ஏற்கெனவே சோலார் ஹோம்ஸ் திட்டத்தில் சோலார் மின்கலம் அல்லது வெந்நீர் தள்ளுபடியைப் பெற்றிருக்கவில்லை எனில்
- இருக்கக்கூடிய சொத்தாக, அதன் மதிப்பு $3 மில்லியனுக்குக் கீழ் மதிப்பிடப்பட்டிருந்தால்
- சொத்து முகவரி சோலார் ஹோம்ஸ் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே சோலார் மின்கலத் தள்ளுபடியை அல்லது வெந்நீர் தள்ளுபடியை உடைமையாளர்-ஆக்கிரமிப்பாளராகப் பெற்றிருக்கவில்லை எனில்[2]
- வாங்கிய தேதியிலிருந்து குறைந்தது மூன்று ஆண்டுகளில் வெந்நீர் அமைப்பு மாற்றப்பட வேண்டும்.

## சோலார் மின்கலக் கடன் - $8,800 வரையிலும்

**பின்வரும் தகுதிகள் இருந்தால் நீங்கள் சோலார் மின்கலனுக்குக் கடன் பெறலாம்:**

- அமைப்பு நிறுவப்படும் சொத்தின் உடைமையாளரும்-ஆக்கிரமிப்பாளரும் நீங்கள் எனில்
- அனைத்து உரிமையாளர்களின் ஒருங்கிணைந்த குடும்ப மொத்த வரி வருவாய் ஆண்டுக்கு $210,000-க்குக் குறைவாக இருந்தால்[1]
- இருக்கக்கூடிய சொத்தாக, அதன் மதிப்பு $3 மில்லியனுக்குக் கீழ் மதிப்பிடப்பட்டிருந்தால்
- சொத்தின் முகவரிக்கு ஏற்கெனவே சோலார் மின்கலத்துக்கு தள்ளுபடி பெற்றிருக்கவில்லை எனில்[2]
- இந்தச் சொத்தில் ஏற்கெனவே 5kW-க்குச் சமமான அல்லது அதைவிட அதிகமான சோலார் PV பேனல்கள் உள்ளன அல்லது சோலார் மின்கல நிறுவுகையோடு ஒன்றாக நிறுவப்பட்டுள்ளது
- 6kWh திறனுக்கு இணையான அல்லது அதைவிட அதிகமாக மின் சேமிப்பகத் தீர்வு இருப்பதுடன் சோலார் விக்டோரியாவின் மின்கலத் தயாரிப்புப் பட்டியலில் இருப்பதாகவும் கட்டிடத்தில் ஏற்கெனவே மின் சேமிப்பக அமைப்பு இல்லாமலும் இருக்க வேண்டும்
- மின்கலத்தை மின்கட்டமைப்புடன் பாதுகாப்பாக இணைப்பதற்கு உங்கள் விநியோகிக்கப்பட்ட வலைத்தொடர்புச் சேவை வழங்குநர் (Distributed Network Service Provider (DNSP)) வசமிருந்து முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது
- உரிமையாளர்/கள் தனது விநியோகிக்கப்பட்ட வலைத்தொடர்புச் சேவை வாங்குநரிடமிருந்து பெறக்கூடிய மதிப்பை அதிகரிப்பதில் மின்கல முன்னோட்டங்களில் பங்கு பெறுவதற்கான தகவல்களைப் பெற ஒப்புக்கொள்கிறார்.

1. கடந்த இரு ஆண்டுகளின் ஏதேனுமொன்றின் வரி வருவாய் அடிப்படையில்
2. எங்கள் வாடிக்கையாளர் சேவைக் குழுவை 1300 376 393 என்ற எண்ணில் தொடர்புகொண்டு ஒரு சொத்தானது இதற்கு முன்பாக சோலார் ஹோம்ஸ் திட்டத்தில் பங்கு பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்தலாம்

© The State of Victoria Department of Energy, Environment and Climate Action 2023

**பொறுப்புத்துறப்பு:** இந்த வெளியீடு உங்களுக்கு உதவக்கூடியதாக இருக்கலாம். ஆனால் விக்டோரியா மாகாணமும் அதன் ஊழியர்களும் இந்த வெளியீட்டில் எந்தவித குறையும் இல்லை என்றோ அல்லது உங்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு முழுக்கவும் ஏற்றது என்றோ உத்தரவாதமளிக்கவில்லை. எனவே இந்த வெளியீட்டிலுள்ள தகவல்கள் எதையேனும் சார்ந்திருப்பதால் எழக்கூடிய ஏதேனும் பிழைகள், இழப்பு அல்லது பிற விளைவுகளுக்கான பொறுப்புகளைத் துறக்கிறது.

SOL131_FS Comb_21.08.23